*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 455/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-2)***

*Name / Father's Name:* ***திரு.சுரேஷ் த/பெ. பச்சமுத்து***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **04.07.2025.**

துவக்க நேரம் 05.28 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஆத்தூர் ஊரக காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.01.2022ம் தேதி தலைவாசல் காவல் நிலையத்தில் காலை 07.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபொழுது ரகசிய தகவலின் பேரில் நானும், மு.நி.கா திரு.வெங்கடேஷ் மற்றும் காவலர் திரு.சுரேஷ் ஆகியோர்கள் காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்வராஜ் அவர்களின் தலைமையில் பூமரத்துப்பட்டி, முட்டல் பகுதியில் ரோந்து சென்றோம்.

2) அன்று காலை 08.00 மணியளவில் ஒற்றைகுழல் நாட்டுத்துப்பாக்கியுடன் வனப்பகுதியில் சுற்றிக்கொண்டிருந்தவர், எங்களை பார்த்ததும் தப்பிக்க முற்பட்டபொழுது, அவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க, அவர் தனது பெயர் அண்ணாமலை த.பெ ஆண்டி என்று கூறினார்.

3) அந்த துப்பாக்கியின் மொத்த நீளம் 154 செ.மீ, துப்பாக்கி பேரலின் நீளம் 112 செ.மீ ஆகும். இதர மரப்பட்டின் நீளம் 42 செ.மீ ஆகும். மரப்பட்டின் அகலம் 13 செ.மீ ஆகும். துப்பாக்கிக்கு மருந்து லோடு செய்யும் கம்பியின் நீளம் 108 செ.மீ ஆகும்.

4) VAO திரு.ஆனந்தகுமார் மற்றும் அவரது உதவியாளர் திரு.கலைச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் துப்பாக்கியை கைப்பற்றி அவர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை காவல் உதவி ஆய்வாளர் தயார் செய்து, மேற்படி சாட்சிகளிடம் கையெழுத்து வாங்கினார்.

5) எதிரியிடம் விசாரித்தபொழுது, நாட்டுத்துப்பாக்கியை முயல் வேட்டைக்காக மலைக்கிராமமான கிடார் என்ற பகுதியில் உள்ள ஒருவரிடம் வாங்கியதாக சொன்னார். அதன் பின்னர் வி.ஏ.ஓ, அவரது உதவியாளருடன், எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து எதிரியின் மீது வழக்கு பதிவு செய்ய காவல் உதவி ஆய்வாளருக்கு நானும் உதவியாக இருந்தேன். காவல் உதவி ஆய்வாளர், என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

1) எதிரி சான்றுப்பொருளை பெயர், அடையாளம் தெரியாத கிடார் கிராமத்தை சேர்ந்த ஒரு நபரிடம் வாங்கியதாக காவல் உதவி ஆய்வாளர் செல்வராஜ் விசாரித்த வாக்குமூலத்தில் சொல்லாமல், தற்பொழுதுதான் முதல் விசாரணையில் சொல்கிறேன் என்று சொன்னால் சரிதான்.

2) தலைவாசல் காவல் நிலையத்திலிருந்து, சம்பவம் நடந்ததாக மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்ட இடம் எவ்வளவு தூரம் என்றால் 12–15 கி.மீ தூரம் இருக்கும். மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள சம்பவயிடமானது வனத்துறைக்கு சொந்தமான காப்புக்காடோ, வனத்துறைக்கு சொந்தமான இடமோ இல்லை என்றால் சரிதான், வனத்துறைக்கு அருகில் உள்ள இடம்.

3) எதிரியின் வீட்டிற்கும், எதிரியை கைது செய்யததாக சொல்லும் இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2 கீ.மீ தூரத்திற்குள்தான் இருக்கும். நாங்கள் மூவரும் இரண்டு இருசக்கர வாகனத்தில் சென்றோமா என்றால் இரண்டு இருசக்கர வாகனத்தில் சென்றோம்.

4) கைப்பற்றுதல் மகஜரில் மரப்பட்டின் நீளம் 42 செ.மீ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். படிவம் 91ல் மரப்பட்டின் நீளம் 82 செ.மீ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், ஆனால் 42 செ.மீ தான் சரி. அந்த படிவம் 91ல் 8 என்ற எண் overwrite செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

5) படிவம் 91 தயார் செய்யப்பட்டது, எதிரியை கைது செய்ததாக சொல்லும் 30.01.2022 தேதிதான் என்றால் சரிதான். படிவம் 91ல் சாட்சி கையொப்பம் என்ற இடத்தில் சாட்சிகள் யாரிடமும் கையெழுத்து பெறவில்லை என்றால் சரிதான். 30.01.2022ல் கைப்பற்றப்பட்டதாக சொல்லும் சான்றுப்பொருளை, 23.03.2022 ம் தேதிதான் நீதிமன்றத்திற்கு அனுப்பியதாக உள்ளது என்றால் சரிதான்.

6) 30.01.2022ல் கைப்பற்றப்பட்டதாக சொல்லும் சான்றுப்பொருள், 23.03.2022 ம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பும் வரை யாருடைய வசம் அந்த சான்றுபொருள் இருந்தது என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் காவல் நிலையத்தில்தான் வைத்திருந்திருப்பார்கள்.

7) ரகசிய தகவல் என்பது செல்வராஜ் என்ற காவல் உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில்தான் சென்றோமா என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு அருகில் இருந்த தனிநபர் சாட்சிகள் எவரையும் நாங்கள் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

8) நாங்கள் தகவல் கிடைத்தவுடன் எந்த பொருட்களையும், சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு எடுத்துச்செல்லவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகஜர், படிவம் 91 ஆகியவை கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

9) பொதுவாக காவல் நிலையாணையின்படி, ஒரு குற்ற வழக்கு தொடர்பாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்னிட்டுதான், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவேண்டும் என்றால் சரிதான். இந்த குற்ற வழக்கில் நாங்கள், காவல் நிலையத்திற்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் முன்பே, கைப்பற்றுதல் மகஜர் மற்றும் மாதிரி வரைபடம், பார்வை மகஜர் ஆகியவைகள் எங்களுடைய ஆவணங்களின்படி தயார் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான்.

10) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாத நிலையில், சம்பவம் இடத்தில் தயார் செய்யப்பட்டதாக சொல்லப்படும் மாதிரி வரைபடத்தில் குற்ற எண்.47/2022, ச.பி 25(1)(A) of Arms Act என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போல சம்பவம் இடத்தில் தயார் செய்யப்பட்டதாக சொல்லப்படும் பார்வை மகஜரின் 4, 5 வது வரிகளில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

11) கடந்த 30.01.2022 ல் எதிரியை கைது செய்ததாகவும், சான்றுபொருளை கைப்பற்றியதாகவும் சொல்லப்படும் தேதி ஞாயிற்றுக்கிழமை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமான ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் எங்களால் தயார் செய்யப்பட்டு, சம்மந்தப்பட்ட சாட்சிகளை காவல் நிலையத்திற்கு வரவழைத்து, காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து பெற்றதால்தான் அதில் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவு குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

12) காவல் உதவி ஆய்வாளர், என்னை எங்கு வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றால் காவல் நிலையத்தில் வைத்துதான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். நான் சொன்ன நேரத்தில், சொன்ன

தேதியில்  எதிரியை கைது செய்யவில்லை என்றும், எதிரியிடமிருந்து எந்த சான்றுப்பொருளையும் கைப்பற்றவுமில்லை என்றும், புள்ளிவிவர கணக்கிற்காக எனது காவல் உதவி ஆய்வாளர் பதிவு செய்த பொய்யான வழக்கிற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்குக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 06.00 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.07.04 17:05:56 +0530

Judicial Magistrate No.2, Attur.